MR. DEPUTY SPEAKER : Almost a probe.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கண் நோய் உடையவர்களில் 100-க்கு 50 பேர் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள். சில பேர் 40-45 வயதிலே இந்த நோய்க்கு உள்ளாகிறார்கள்.

Government Hospital for Veeraganur

* 541 *Q.*—THIRU M. MARIMUTHU : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to open a Government Hospital at Veeraganur ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

காச நோயாளிகளுக்கு மில்லில் அரைக்கப்பட்ட அரிசி

* 542 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு கைக் குத்தல் அரிசிக்குப் பதில், மில்லில் குத்தப்பட்ட அரிசி வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தக் காச நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் கைக்குத்தல் அரிசி கரடு முரடாக இருப்பதால் சாப்பிட முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது நீண்ட காலமாக இருக்கிறது என்று அறிகிறேன். அதை உடனடியாக மாற்றியமைக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவர்களுக்குக் கொடுக்கிற கைக்குத்தல் அரிசி மிகவும் தரக்குறைவாகவும், அல்லது வேறு விதமான மணம் வீசுவதாகவும், தரமாக இல்லை என்றும் சொன்னதாலும், அவர்களுக்கு மில்லில் அரைத்த அரிசி வழங்கலாம் என்று பரிசீலிக்கப்படுவதாக அறிகிறேன். ஆனால் பல்வேறு வகைகளில் கைக்குத்தல் அரிசி நல்லது என்றும், காச நோயாளிகளுக்கு மட்டுமல்ல, நம்மைப் போன்றவர்களும் சாப்பிடக்கூடிய வாய்ப்பு

1973 மார்ச் 28]

இருக்குமானால், அது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது என்றும் சொல்கிறார்கள். சர்தார் வேதரத்தினம் தோற்றுவித்த வேதாரண்யம் குருகுலப் பள்ளியில் அங்கேயுள்ள மாணவர்களுக்கு கைக்குத்தல் அரிசி உணவையே வழங்கி வருகிறார்கள். அந்த குருகுலத்தில் இருக்கிற மாணவர்கள் நல்ல திடகாத்திரம் உள்ளவர்களாக, மற்றவர்களை விட அதிக வலுவுள்ளவர்களாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதனால் ஏற்பட்டுள்ள நற்பலனை அறிந்த பிறகு, அந்தக் கைக்குத்தல் அரிசியைப் பொதுவாகக் கைவிட்டு விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, கைக்குத்தல் அரிசியின் தவிட்டில் தான் பி வைட்டமின் இருப்பதாகச் சொல்கிறார்கள். மீண்டும் இந்தக் கருத்தை அந்த காச நோயாளிகளுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களைக் கைக் குத்தல் அரிசி சாப்பிட வேண்டுமென்று கூற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆனால் அவர்களுக்குக் கிடைத்த அந்தக் கைக்குத்தல் அரிசி சரியாகப் புழுங்கப்படாத காரணத்தால் நாற்றம் வீசுவ தாக இருக்கலாம். It emanates bad smell and it is also full of stones and clay என்று தெரிவித்து இருக்கிறார்கள். பொதுவாகவே, இந்தக் கைக்குத்தல் அரிசி பக்குவமாகப் புழுக்கி, அதற்குப் பிறகு தயாரித்தால் தான் அது நல்ல முறையில் இருக்கும். அது பற்றி கவனிக்கும் படி நான் கேட்டுக்கொள்வேன்.

Duration of School and College Courses

* S.N. *Q.* 5.—THIRUMATHI ALDA M. FOWLER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to introduce the scheme of 10-year School course, 2-years Intermediate course and 3-year Degree course in the State;

(*b*) if so, the present stage of the proposal; and

(*c*) the probable academic year from which the scheme will be implemented ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு ஆகியவற்றின் தற்போதைய ஆண்டு வரம்பை மாற்றுவது தேவையா என்பது ஆய்விலுள்ளது. தேவை என்று முடிவு செய்யப் பட்டால், எந்த ஆண்டு முதல் மாற்றலாம் என்பது குறித்தும் முடிவு செய்யப் படும்.